சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். ஓ.எஸ். 111/2020

**PW 1 சண்முகம்** **26.07.2023**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன ராஜன் எனக்கு அண்ணன் முறையாவார். ராஜன் அவரது சொத்துக்கள் குறித்து எனக்கு கொடுத்துவிடுவதாக சொல்லியிருந்தார். ராஜன் 1ம் பிரதிவாதியான எனது மகனுக்கு சொத்துக்களை கொடுத்துவிடுவதாக சொல்லியிருந்தார் என்றால் சரியல்ல. எனக்கு சொத்துக்களைக் கொடுத்துவிடுவதாக ராஜன் சொல்லியதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் அண்ணன் ராஜனை 1ம் பிரதிவாதிதான் பார்த்துவந்தார் என்றாலும் நான் பராமரித்து வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் என் மூத்த மகன் 1ம் பிரதிவாதி குடியிருந்து வந்தார். தற்போது பராமரிப்பிற்காக காலியாக உள்ளது. உயிலில் கண்ட சாட்சிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எப்போது பிரச்சனை செய்தார் என நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அவ்வாறு எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும் அதனால்தான் நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதி என்னிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உயில் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ராஜன் 1ம் பிரதிவாதிக்கு சொத்துக்கள் கொடுப்பதாக சொல்லியிருந்தார் என்றாலும் அதனால் தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்குத்தான் பாத்தியம் என்றால் சரியல்ல. இறந்துபோன ராஜனின் மனைவி திருமணமாகி 6 மாதங்களில் பிரிந்து சென்றுவிட்டார். விவாகரத்து செய்து கொள்ளாமல் ராஜனின் மனைவி

காளியம்மாள் வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டார். காளியம்மாள் இறந்துவிட்டார். ராஜனுக்கு குழந்தைகள் இல்லை. அவருக்கு குழந்தைகள் இல்லாததால் 1ம் பிரதிவாதியைத்தான் வளர்ப்பு மகனாகக் கருதி சொத்தை கொடுப்பதாக இருந்தார் என்றாலும், அதனால்தான் 1ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் தாவா சொத்து இருந்தது என்றாலும் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பிரச்சனை என்பதால் தாவா சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யான உயிலை தயாரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி